பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(31.08.2022 முதல் 04.09.2022 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

---

அறிக்கை எண்: 069 (08) PJN/GKMS/2022 தேதி: 30.08.2022

### காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (25.08.2022 முதல் 29.08.2022 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -04.09.2022 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25/08 | 26/08 | 27/08 | 28/08 | 29/08 | | நாள்-1 31/08 | நாள்-2 01/09 | நாள்-3 02/09 | நாள்-4 03/09 | நாள்-5 04/09 |
| 0 | 1.0 | 3.5 | 4.0 | 0 | மழை (மி.மீ) | 4 | 4 | 4 | 4 | 12 |
| 33 | 33 | 34 | 34 | 34 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 32 | 32 | 32 | 22 | 32 |
| 25 | 25 | 24 | 25 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 27 | 26 | 26 | 26 | 26 |
| 2 | 3 | 5 | 3 | 4 | மேக மூட்டம் | 4 | 7 | 6 | 6 | 8 |
| 57-84 | 64-89 | 63-92 | 62-87 | 69-86 | ஈரப்பதம் (%) | 50-80 | 50-80 | 50-70 | 50-70 | 50-70 |
| 4 | 3 | 6 | 2 | 2 | காற்றின் வேகம் (கி.மீ) | 8 | 8 | 8 | 8 | 12 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

## எதிர்பார்க்கப்படும் வானிலை (31.08.2022 முதல் 04.09.2022 வரை):

→ ஆகஸ்ட் 31 லிருந்து செப்டம்பர் 03 வரை அநேக இடங்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

→ செப்டம்பர் 04 தேதியில் அநேக இடங்களில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

- அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 26-32 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 50-80 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் மணிக்கு 08-12 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.
- செப்டம்பர் 04 லிருந்து 10 வரை மழை (8.43 மி.மீ) இயல்பிற்கு அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை (30.44 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (24.07 டி.செ) இயல்பாகவும் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுறை

| பயிர்கள் | பயிர் நிலை | அறிவுறை |
|---|---|---|
| இடி மின்னல் எச்சரிக்கை | | ஆகஸ்ட் 31 லிருந்து செப்டம்பர் 04 வரை இடியுடன் மின்னல் ஓரிரு இடங்களில் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.<br>இடி மின்னலின் போது தனியாக இருக்கும் மரத்தின் கீழோ அல்லது அடர்ந்த மரங்களுக்கு கீழோ கால்நடைகளை தங்க வைப்பதையும், டிராக்டர், பண்ணை இயந்திரங்கள் மற்றும் இதர உலோகங்களால் |

| | | |
|---|---|---|
| | | செய்யப்பட்ட பண்ணை உபகரணங்களுக்கு அருகில் விலங்குகள் செல்வதையும் தவிர்த்து கால்நடை கொட்டகைக்குள் வைத்திருந்து மின்னல் தாக்காதவாறு விலங்குகளை பார்த்துக்கொள்ளவும். |
| **பசுந்தாள் உர பயிர்கள்** | **விதைப்பு** | கடந்த சில தினங்களில் பெறப்பட்ட மழையை பயன்படுத்தி சித்தகத்தி அல்லது தக்கைப் பூண்டு அல்லது மணிலா அகத்தி போன்ற பசுந்தாள் உர பயிர்களின் விதைகளை ஹெக்டருக்கு 50 கிலோ விதைத்து பூக்குவதற்கு முன்பு மடக்கி உழுதிட வேண்டும். |
| **நெல்** | **நிலம் தயாரித்தல்** | சென்ற ஓரிரு நாட்களில் கிடைக்கப்பெற்ற மழையைப் பயன்படுத்தி உழவு மேற்கொண்டு சம்பா பருவத்திற்கான நிலத்தை தயார் செய்யலாம்.<br><br>நிலத்தை சமன் படுத்தி, அரை அடி அகலத்தில் சிறிய வடிகால் வாய்க்கால்கள் நிலத்தின் குறுக்கேயும், 3 மீ இடைவெளியிலும், வரப்பின் ஓரத்திலும் அமைப்பதனாலும் கன மழை ஏற்படும் போது அதிக நீரை வடிகட்டி ஆரம்ப வளர்ச்சி நிலையில் உள்ள நெற் பயிரை பாதுகாக்கலாம். |
| | **விதைப்பு** | சம்பா பருவத்திற்கு ஏற்ற நீண்ட கால நெல் இரகங்களான சி. ஆர் 1009 (CR 1009), ஏடிடீ 50 (ADT 50) மற்றும் கே கே எல் ஆர்1 (KKLR 1) விதைகளை பயன்படுத்தலாம். |
| | **விதை நேர்த்தி** | ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டசிம் அல்லது பைரோகுயிலான் அல்லது 2 மி.லி. டிரைசைக்லோசோல் கரைசல் கலந்து 10 மணி நேரம் ஊர வைத்து பின்னர் வடிகட்டவும். |
| **கால்நடை** | **தடுப்பூசி** | கால்நடைகளைத் தாக்கும் கோமாரி நோய் மற்றும் தொண்டை அடைப்பான் நோய்களுக்கு மழைக்காலம் தொடங்கும் முன்னர் தடுப்பூசிகளைப் போட வேண்டும். குளம், குட்டைகளில் தண்ணீர் குடிக்கும் மாடுகளுக்கும் அவற்றைச் சுற்றி மேயும் மாடுகளுக்கும் தட்டைப் புழுவிற்கான குடற்புழு நீக்க மருந்தினைப் கொடுக்க வேண்டும். |
| | **கொட்டகை நிர்வாகம்** | மழைக்காலம் வருவதற்கு முன்பு கால்நடைகள்/ஆடு/கோழி கொட்டகையின் கூரைகளை சரி செய்யவும். இல்லையெனில், அழுக்கு கொட்டகைகளில் மழை நீர் கசிவதால் அமோனியா உற்பத்தியும் மற்றும் இரத்தக் கழிச்சல் நோயும் ஏற்பட வாய்ப்புள்ளது. |
| | | ஆடுகளில் குளம்பு சிதைவு நோயைத் தடுக்க தரையின் விரிசல்கள் மற்றும் மேடு பள்ளங்களை சரி செய்து மழை நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும். |

**குறுஞ்செய்தி:** அடுத்த சில தினங்களில் லேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால், பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை ஒத்திவைக்கலாம்.

**முதல்வர்**